DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 33/2014 PW : 2

Name : ஸ்ரீனிவாசன் Age –

S/o : ஸ்ரீதரன் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 14.11.2025.

<u>**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1) நான் Director of Medical Educationand research administrative director ஆக பணிபுரிந்து ஓய்வு அடைந்து விட்டேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் என் அப்பா போட்ட வாக்குமூலம் அடிப்படையிலும் எனக்கு தெரிந்த விபரம் அடிப்படையிலும்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று ஞாபகமில்லை. இந்த தாவா பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாவில் 6 அட்டவணை சொத்துக்கள் போடப்பட்டுள்ளன. வழக்கு சொத்துக்கள் பேரம்பாக்கத்தில் உள்ளது. தாவா சொத்து என்னுடைய தாத்தா ரங்கைய நாயுடுவின் சுய சம்பாத்திய சொத்து ஆகும். தாவா சொத்து எந்த கால கட்டத்திலும் கூட்டு குடும்ப சொத்தாக இருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அனைவரும் தனித்தனியாக வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஒன்றாக தான் இருந்தார்கள். தாவா சொத்து அயிட்ட எண்.10, 20, 21, 22, 23, 24, 25 மற்றும் 26 மட்டும் தான் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றாலும், இதர சொத்துக்கள் தாமோதரனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் தவறு.

2) 1ம் பிரதிவாதி ஒரு சில காலகட்டத்திற்கு பின்பு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் அதன் விபரங்கள் எனக்கு ஞாபகமில்லை. சர்வே எண். 473/4-ல் 32 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றால்

அதை பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் பெயரில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் தெரியும், அது ரத்து செய்யப்பட்டுவிட்டது. அந்த ஆவணம் அடமான ஆவணம் என்று சொல்லிவிட்டு 26.08.1994ம் அன்று செட்டில்மெண்ட் பத்திரமாக எழுதிக்கொண்டார்கள். நான் சொல்வது தவறு என்றாலும் என்னடைய தாத்தா அவர் விருப்பத்தின் அடிப்படையில் அந்த செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த விபரங்கள் என் அப்பா சொல்லி தான் எனக்கு தெரியும். அந்த ஆவணத்தை வாதியின் துண்டுதலின் பேரில் தான் 24.05.1998 தேதியிட்ட என்தாத்தா ரத்து செய்து விட்டார் என்று சொன்னால் அது சரியல்ல. என் தாத்தாவிற்கு உண்மை தெரியவந்ததால் தான் அதை ரத்து செய்துவிட்டார்.

3) என் தந்தை DRO ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். 1995ம் ஆண்டு மேற்சென்ன ஆவணம் ரத்து செய்யப்பட்ட போது என் அப்பா ஓய்வு பெற்றுவிட்டார். அவர் ஓய்வு பெற்று இருந்தாலும் அவருடைய செல்வாக்கை வைத்து என் தாத்தாவை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று பத்திரத்தை ரத்து செய்து விட்டார் என்று சொன்னால் அது தவறு. பத்திரத்தை ரத்து செய்யும் போது என் தாத்தாவிற்கு 85, 90 வயது இருக்கும். அந்த காலகட்டத்தில் உடல் நோய்வாய் பட்டிருந்தால் என்றால் சரியல்ல. அவருடன் அன்று சார் பதிவாளர் அலுவலகத்திற்கு யார் சென்றார்கள் என்ற விபரம் தெரியாது. என் தந்தை தான் அவரை வர்புறுத்தி கட்டாயப்படுத்தி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு என் தாத்தாவை அழைத்து சென்றார் என்றால் சரியல்ல. என் தந்தை அவருடைய செல்வாக்கை பயன்படுத்தி 1ம் பிரதிவாதியின் பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த உத்தரவை எதிர்த்து தாமோதிரன் அசல் வழக்கு எண்.181/2002 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அது ரத்து செய்தது சம்மந்தமாக சிவில் நீதிமன்றததில் தான் உத்தரவு பெறவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அசல் வழக்கு எண்.102/2016 தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக ஆவணங்களை பார்த்து தெரிந்து

கொண்டேன். அந்த வழக்கு இன்றைய வரை நிலுவையில் தான் உள்ளது என்ற விபரம் தெரியும். அந்த வழக்கின் பத்திர எண்.809/1995 ரத்து செய்தது செல்லாது என்று தான் கோரியுள்ளார்கள் என்றால் ஆவணங்களை பார்த்து நான் தெரிந்து கொண்டேன். என் தகப்பனார் அந்த வழக்கையும் இந்த வழக்கையும் சோத்து நடத்த வேண்டும் என்று ஒரு TROP தாக்கல் செய்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் மனுவை அந்த தொட்ர்ந்து நடத்தாமல் விட்டுவிட்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த ரத்து பத்திரத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்பது தெரியாது. அந்த ரத்து பத்திரத்திற்குண்டான முத்திரை தாள்கள் என் தந்தை தான் வாங்கினார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.102/2016 என் தந்தை தான் தீவிரமாக எடுத்து நடத்தி வந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் அசல் வழக்கு எண்.102/2016-ல் குறிபபிடப்பட்டுள்ள சொத்துக்களை தவிர்த்து தான் இதில் நான் பாகம் கோரவேண்டும் என்றால் சரியல்ல.

4) தாவா சொத்துக்களை தவிர்த்து 1ம் பிரதிவாதியை தவிர மற்ற தரப்பினர்கள் அனைவரும் சேர்ந்து 8 ஏக்கர் 219/3 மற்றும் பிற சர்வே எண்களில் கூட்டாக கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த தாவா பகுதியாக பாகப்பிரிவினை கோருதல் இயலாது என்பதால் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூட்டு குடும்ப நிலத்தில் கரும்பு பயிரிட்டு ரூ.27,37,254/- பெறப்பட்டதாக சொல்லியுள்ள விவரம் நான் திருவாலங்காடு கூட்டுறவு சக்கரை அலையில் பெறப்பட்ட விவரங்களை வைத்து சொல்லியுள்ளேன். என் அப்பாவே அந்த விவரங்களை வாங்கிவைத்திருந்தார். அதற்குண்டான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அந்த தொகை பயிர் தொகை மூலமாக ஈட்ட இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு விவசாயம் தெரியாது. நெற்பயில்கள் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு விளைச்சல் வரும் என்பது எனக்கு

தெரியாது. அதே போது ஒரு ஏக்கர் கரும்புக்கு எத்தனை டன் விளைச்சல் வரும் என்பது எனக்கு தெரியாது. கரும்பு அரசுக்கு தான் விற்கவேண்டும் என்ற விபரம் தெரியும். எனக்கு எந்த விரமும் தெரியாமல் ஒரு பெரிய தொகையை நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கரும்பு ஈட்டிய வருமானமாக குத்துமதிப்பாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தை பொறுத்து தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.14 18:37:37 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.